2018

වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

දුරස්ථ ඉගෙනුම් මධ්‍යස්ථානය

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம

Distance Learning Centre

State Owned Institute Under
Ministry of Public Administration

DLC
Distance Learning Centre Ltd.
Connecting Minds

GLOBAL
DEVELOPMENT
LEARNING
NETWORK
GDLN

பொருளடக்கம்

தலைவரின் மதிப்புரை 56

பிரதம நிறைவேற்று அதிகாரியின் அறிக்கை 58

வரையறுக்கப்பட்ட தெலைக் கல்வி நிலையம் தொடர்பான மீள்பார்வை 59

பணிக்கூற்று மற்றும் தொலைநோக்கு 62

கூட்டு நிறுவனத் தகவல்கள் 63

பணிப்பாளர் குழு 64

மனித வளங்கள் 66

பௌதீக வளங்கள் 68

உற்பத்திகள் மற்றும் சேவைகள் 69

2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பிரதான பயிற்சித் திட்டங்கள் 70

நிதியியல் ரீதியான பிரதான விடயங்கள் 73

பணிப்பாளர்களின் அறிக்கைகள் 74

கணக்காய்வாளர்க் குழு அறிக்கை 77

வெளிவாரியான கணக்காய்வாளரின் அறிக்கை 79

நிதி அறிக்கைகள் 85

வருடாந்த பொதுக் கூட்ட அறிவிப்பு 112

பதிலாள் படிவம் 113

தலைவரின் மதிப்புரை



திருமதி. வசந்தா பெரேரா

நிறுவனத்தின் பணிப்பாளர் குழு சார்பாக 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வுக் கணக்குகளை சமர்ப்பிப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம் கடந்த மூன்று ஆண்டுகளில் வெளிப்படுத்திய அதன் பாரிய முன்னேற்றப் போக்கின் அதி உச்ச வெற்றி நிலையை நோக்கிப் பயணித்துள்ளதனால் உயர் வருமானத்தையும் இலாபத்தையும் அடையப் பெற்றுள்ளதாக அறிக்கையிட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் நிறுவனமானது அதன் சகல துறைகளிலும் உயர் மட்டத்துடைய செயலாற்றுகையினைப் பேணிச் செல்லும் சிறப்பு மிக்க ஆண்டாகவும் கருதப்படுகின்றது. அதே போன்று தொலைக் கல்வி நிலையம் கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் தேசிய மட்டத்திலான செயற்திட்டங்களில் அதி சிறந்த வகையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தின் நோக்கம் மற்றும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் காணப்படும் தெளிவு மற்றும் நிறுவனம் எதை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்ற நீண்ட கால தொலை நோக்கினைக் கொண்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதானது தொலைக் கல்வி நிறுவனம் கடந்த மூன்று வருடங்களில் தொடர்ச்சியாக அடையப் பெற்ற வெற்றிக்கான காரணமாக அமைந்துள்ளது என்பதனை கவனத்திற் கொள்வது மிக முக்கியமானதாகும்.

உலகளாவிய அபிவிருத்தி கற்கை வலையமைப்புடன் ஒன்றிணைந்து சர்வதேச நிறுவனங்களினால் இனங்காணப்பட்ட புதிய செயற்திட்டங்களின்பால் கவனம் செலுத்துவது தொலைக் கல்வி நிலையத்தின் மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் பெறும் மற்றொரு துறையாக காணப்படுகிறது. உலகளாவிய அபிவிருத்தி கற்கை வலையமைப்பினால் உலக வங்கியின் நிதியைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் அதன் ஆசிய பசிபிக் செயலகத்தினை நடாத்திச் செய்யும் பணியை மீண்டுமொரு முறை தொலைக் கல்வி நிலையத்திடம் ஒப்படைத்துள்ளது. அதற்கு மேலதிகமாக, இலங்கையினுள் உலக வங்கியின் செயற்பாட்டு நோக்கத்தை அடைந்து கொள்ள முடியுமான நம்பிக்கைத் தன்மை வாய்ந்த பங்குதாரராக திகழும் தொலைக் கல்வி நிலையத்தின் நிலையை பலப்படுத்தி உலக வங்கியினால் அதன் கழிவு முகமைத்துவச் செயற்திட்டத்தின் பயிற்சி அதனிடம் வழங்கியுள்ளது. அமைப்பினுள் வெளிப்படுத்திக் காட்டப்படும் மாற்றங்கள் மற்றும் அதன் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் முறையை மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் புதிய ஒத்துழைப்புக்களுக்கான பாதைகளை திறந்து விடுகின்றன.

வீடியோ செயலமர்வு முறைமைகள் ஊடாக மனித வள அபிவிருத்தியினை புதிய கோட்பாட்டினுள் கொண்டு வருவதன் மூலம் அதனை இலக்காகக் கொண்டு தொலைக் கல்வி நிலையம் தனது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அண்மைக் கால மாற்றங்களினால் நிலையத்தின் உள்ளக இயலளவினை மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகளை முழுமைப்படுத்துவதற்கு மாற்றங்களுக்கு கொண்டு வந்து தொழில்நுட்பத்தின் புதிய போக்கினை உட்புகுத்துவது இந் நிறுவனத்தின் அவசியப்பாடாக உள்ளது. உலகளாவிய விருத்தி கற்கை வலையமைப்பிற்காக அமைந்த வீடியோ செயலமர்வுச் செயற்பாடுகளுக்காக அமைந்த தொலைக் கல்வி நிலையம் Cloud Based தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட 2017 ஆம் ஆண்டில் இப் பயணம் தொடங்கி வைக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இப் பணியை தொடர்ந்து வரும் ஆண்டுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இம் மாற்றங்களின் மூலம் தொலைக் கல்வி நிலையம் முன்னுதாரணமாக

திகழ்வது சேவை எதிர்பார்ப்புக்களைத் தாண்டிய தங்களது சேவைப் பெறுநர்களுக்கு தரமிக்கதும் உயர் சேவையையும் வழங்குவதற்காக புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் இசைவாக்கங்களுக்கு உட்பட்டு அதிஉயர் பிரயோசனத்தைப் பெறுவதற்கு அதற்குரிய இயலுமையாகும்.

இறுதியாக, 2018 ஆம் ஆண்டின் போது மிகவும் உயர் மட்டத்திலமைந்த போற்றத்தக்க செயலாற்றுகையினை அடையப் பெற்றமைக்குப் பதிலாக தொலைக் கல்வி நிலையத்தின் பணியாட் தொகுதியினர் மற்றும் முகாமைத்துவக் குழாமிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் எதிர்வரும் வருடங்களில் இதனை விட உயர் பெறுபேற்றினை அடைந்து கொள்வதற்கு முடியுமாக இருக்கும் எனவும் வேண்டுகிறேன்.

வசந்தா பெரேரா
தலைவர்,
தொலைக் கல்வி நிலையம்
கொழும்பு, இலங்கை.

தலைமை நிறைவேற்று அதிகாரியின் அறிக்கை



கெருஷான் அருளானந்தம்

இவ் வருடம் தொலைக் கல்வி நிறுவனம் அதி உயர் ஆண்டிறுதிக்கான இலாபங்களை பதிவு செய்யும் மற்றொரு வருடமாகத் திகழ்கின்றது. தொலைக் கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத் தடவைகளின் எண்ணிக்கையை அதிகரித்து உயர் பெறுமானத்துடன் கூடிய மூலோபாய பங்காளிகளுடனான ஒத்துழைப்புடன் வருடம் பூராகவும் மேற்கொள்ளப்பட்ட அதிசிறந்த நடவடிக்கைகளின் காரணமாக ஒட்டுமொத்தமாக உயர் இலாபத்தினையும் பதிவு செய்வதற்கு முற்பட்டுள்ளது.

தொலைக் கல்வி நிலையத்தால் உலக வங்கிச் செயற்திட்டத்தின் மூலம் உலகளாவிய அபிவிருத்தி கற்றல் வலையமைப்புடனான (GDLN) தனது ஒத்துழைப்பை எதிர்வரும் காலங்களிலும் பேணிச் செலலும். உலகளாவிய அபிவிருத்தி கற்கை வலையமைப்பின் செயலகம் மீண்டும் ஒருமுறை 2018 ஆம் ஆண்டிலும் நடாத்திச் செல்வதற்கு தொலைக் கல்வி நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறைகளுக்கு புத்தாக்க சிந்தனைகளை கொண்டு வருவதன் மூலம் மனித மூலவள விருத்தியில் முன்னெப்போதும் இல்லாத வாய்ப்புக்களை உருவாக்கும் பலத்தை உரித்தாக்கும் வகையில் தொலைக் கல்வி நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கல்வித் துறையில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மாகாண மட்டங்களிலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. 'வகுப்பறையினுள் கற்பித்தல்' இன் மூலம் திறன் விருத்திகளை மேற்கொள்வதனை ஒட்டுமொத்த நோக்கமாக கொண்டு வடமேல் மாகாணத்தில் மட்டும் 30 குழுக்களாகக் கொண்டு அதிபர்களுக்கு தொலைக் கல்வி நிலையத்தால் பயிற்றுவிப்புக்கள் நடைபெற்றுள்ளன. எதிர்வரும் காலங்களில் ஏனைய மாகாணங்களிலும் கல்வித் துறையில் இவ்வாறான பயிற்சித் திட்டங்களை நடாத்துவது தொலைக் கல்வி நிலையத்தின் முக்கிய நோக்கமாக அமைந்துள்ளது.

கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஒழுக்காற்று நடைமுறை ஒழுங்குகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதையும் முதன் முதலாக மேற்கொண்ட மற்றுமொரு நடவடிக்கையாகும். இவ் வருடத்தில் 500 க்கும் அதிகமான ஊழியர்கள் அரச துறையிலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் இருந்து இச் செயலமர்வு தொடரின் மூலம் பயிற்சி பெற்றதோடு, அதன் மூலம் தொலைக் கல்வி நிலையம் அரச துறையில் அநேகமான ஊழியர்களுக்கான நம்பகத்தன்மையான பயிற்சிப் பங்காளியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட திட்டங்களினால் கிடைக்கப்பெற்ற வருமானங்களுக்கு மேலதிகமாக, தொலைக் கல்வி நிலையம் அதன் வசதி வாய்ப்புக்களை முன்பதிவு செய்து கொடுத்தலைப் போன்றே வீடியோ கலந்துரையாடல்களை நடாத்துவதன் மூலமும் கிடைக்கப்பெற்ற வருமானமும் அதிகரித்துள்ளது. இயங்கலைப் பரீட்சைகளின் மூலமும் சிறந்த வருவாய் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளதோடு பரீட்சைகள் நடாத்தப்படும் மூன்று நிறுவனங்கள் அதனுடன் இணைந்து கொள்ளலும் இடம்பெற்றுள்ளது. சிறந்த தொழில்நுட்பம் மற்றும் பரீட்சை நிர்வாகம் தொடர்பான இயலுமையுள்ள ஊழியர்கள் தொலைக் கல்வி நிலையத்தில் இருப்பதனால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்ற பரீட்சைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நிலையத்தின் பங்குதார சேவைப் பெறுநர்களின் கடுமையான பயிற்சித் தேவையின்பால் கவனம் செலுத்தப்பட்டு அயராது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொலைக் கல்வி நிலையக் குழவினர் முயற்சிப்பதோடு தொடர்ச்சியாக பெறுமானங்களை அதிகரித்துக் கொள்வதும் அவர்களின் பாரிய எதிர்பார்ப்பு தொலைக் கல்வி நிலையத்தின் உயர் செயலாற்றுகைக்கு காரணமாக அமைந்துள்ளது.

உண்மையாகவே சவாலாக அமையப்பெற்ற 2019 ஆம் ஆண்டில் காலடி வைத்துள்ள நாம் எமது பெறுமானங்கள் மற்றும் சேவைப் பெறுநர்களின் போக்குகளால் வழிநடாத்தப்படும் புத்தாக்கங்களின் மூலம் வழிகாட்டுதல்கள் கிடைக்கப்பெற்றாலும் அமைப்பாக மாறுவதற்கு எம்மிடம் காணப்படும் உறுதியைக் கொண்டு செயற்படுவோம். அவை அனைத்தினூடாக, நாங்கள் பணியாற்றும் தனிநபர்களுக்கும் குழுக்களுக்கும் முன்னோடியில்லாத வாய்ப்புக்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளளோம்.

கெருஷான் அருளானந்தம்
பிரதான நிறைவேற்று அதிகாரி
தொலைக் கல்வி நிலையம்
கொழும்பு, இலங்கை.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம்
தொடர்பான கண்ணோட்டம்

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம் (DLC) என்பது இலங்கை அரசாங்கத்தால் 2002 அம் ஆண்டு நிறுவப்பட்ட முதன்மையான பயிற்சி நிறுவனங்களில் ஒன்றாகும். இது அரசாங்க மற்றும் தனியார் துறையினரின் இயலளவு விருத்தியினை மேற்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு உலகளாவிய மட்டத்தில் நடைபெறும் சிறந்த பயிற்சிகள் பற்றியும் தமது அவதானத்தினைச் செலுத்துகின்றது. கடந்த சில ஆண்டுகளில் உலகளாவிய கற்கை வலையமைப்பின் உதவியுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளவாளர்களின் பங்குபற்றலுடன் அந்நபர்களுக்கு கல்வி மற்றும் தொழில்சார் அறிவையையும் திறமையையும் இற்றைப்படுத்துவதன் மூலம் அவர்களை விருத்தி செய்வதற்கு இந் நிறுவனத்திற்கு முடியுமாக இருந்தது. வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் பயிற்சி நடவடிக்கைகள் பாரம்பரிய சிந்தனைகளின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு அவர்களை பயிற்சி பெறுநர்களின் விருத்தியினைப் போன்றே அவர்களின் செயல்திறனையும் மேம்படுத்துவதற்கு உதவுகிறது.

கடந்த சில ஆண்டுகள் பூராகவும் தொலைக் கல்வி நிலையத்தின் பாரம்பரிய அறிவினைப் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக கேள்வியின் அடிப்படையில் அமைந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தப் படுகின்றன. தற்போதைய வர்த்தக சூழலினுள், வர்த்தகச் சூழலானது உள்நாட்டு மற்றும் உலகளாவிய மட்டத்தில் துரிதமாக மாற்றமடைந்து வருகின்றது. நவீன அமைப்புக்களின் தயாரிப்புக்களை மையப்படுத்திய அணுகுமுறை தொடக்கம் வாடிக்கையாளர்களை இலக்காகக் கொண்ட அணுகுமுறையினை நோக்கி மாறிக் கொண்டிருக்கும் போக்கினைப் பயன்படுத்தி விசேடமான திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இப்புதிய போக்குநிலையுடன், தனது சேவைப் பெறுநர்களுக்கு தரம் வாய்ந்த உயர் சேவையினை வழங்குவதற்கு தொலைக் கல்வி நிலையத்துக்கு முடியுமாக இருந்தது. அதன் விளைவாக, கடந்த வருடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மீளாய்வு ஆண்டினுள் நிறுவனத்தின் வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் அதிகரித்துள்ளது. அதுவானது, நிலையத்தின் ஒட்டுமொத்த செலவானது 2017 ஆம் ஆண்டின் போது ரூபா. 29.1 மில்லியன் தொடக்கம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 21.5 மில்லியன் வரை குறைவடைவதற்காக (2 ஆம் அட்டவணை) தொலைக் கல்வி நிலையத்தின் பணியார்த் தொகுதியினர் மேற்கொண்ட தொடர்ச்சியான முயற்சிகள் தெளிவாக பிரதிபலிக்கின்றது. அதன் விளைவாக வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 14.1 மில்லியன் தொடக்கம் 2018 ஆம் ஆண்டில் ரூபா. 15.1 மில்லியன் தொடக்கம் வரை சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபத்தின் இச் சிறு முன்னேற்றம் நிலுவைப் பதிவேட்டில் இரு வகையில் பதியப்பட்டுள்ள சீராக்கத்துடன் தொடர்புடையதாக இடம்பெற்றது என குறிப்பிடுதல் வேண்டும். அவையாவன; கடந்த சில வருடங்களாக ஏற்பட்டுள்ள மாற்றங்களினால் தெளிவுபடுத்தப்படுவது சீராக்கம் செய்யப்பட்ட வாடகை முறை நிலுவை மற்றும் மீளச் செலுத்தப்பட்ட வருமான வரிகளின் ஒரு பகுதி ஆபத்தினைக் குறைப்பதற்காக தீர்க்கப்படுகின்றது. எவ்வாறிருந்த போதிலும் தொலைக் கல்வி நிலையம் அதன் மூலோபாய இலக்குகளினால் பெறும் தெளிவான வழிகாட்டலின் மூலம் எதிர்வரும் ஆண்டுகளில் செயலாற்றுகையில் இவ்வாறான போக்கினை தொடர்ந்தும் பேணிச் செல்லப்படும்.


கடந்த ஐந்து (05) வருடங்களினுள் நிறுவனத்தின் செயலாற்றுகை

1 ஆம் அட்டவணை – வரிக்கு முன்னரான தேறிய இலாபம் (ரூபா.)

	2014	2015	2016	2017	2018
மொத்த வருமானம் (நிதியியல் வருவாய் உட்பட)	34,262,954	40,428,238	48,599,370	69,671,388	67,769,778
மொத்த செலவு	30,933,905	33,881,823	40,757,451	55,552,355	52,651,915
வருமான வரிகளுக்கு முன்னரான இலாபம்	**3,329,049**	**6,546,415**	**7,841,919**	**14,119,033**	**15,117,863**

2 ஆம் அட்டவணை – மொத்த இலாபம் (ரூபா.)

மொத்த இலாபம்	2014	2015	2016	2017	2018
முக்கிய செயற்பாடுகளினால் கிடைக்கப்பெற்ற வருமானம்	29,374,573	36,673,859	44,262,033	62,953,972	59,779,244
விற்பனைச் செலவு	10,254,365	11,628,170	15,528,207	29,154,623	21,572,552
மொத்த இலாபம்	**19,120,208**	**25,045,689**	**28,733,826**	**33,799,349**	**38,206,692**
மொத்த இலாபச் சதவீதம்	**65%**	**68%**	**65%**	**54%**	**64%**



படக் குறிப்பு 1 – வருடாந்த இலாபம்

இயலளவு விருத்தியின் முக்கியத்துவம்.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சி (ICT), புத்தாக்க உற்பத்திகள், செயல்முறைகள், கட்டமைப்புகள், உலகமயமாக்கலுடன் தொடர்புடைய சிக்கல்கள் மற்றும் அதிகரித்த அபாயங்களுடன், இன்றைய இலங்கைப் பொருளாதார அபிவிருத்தியில் சேவைத் துறையின் பங்களிப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலைத்திறன் என்பன முக்கிய பங்களிப்புச் செலுத்தும் காரணிகளாக மாறியுள்ளது. அண்மைய ஆண்டுகளில் பொருளாதாரத்தில் விருத்தியடைந்த நாடுகள் தங்களது சேவை வழங்கலை இற்றைப்படுத்துவதற்கு முற்படும் போது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தங்களது தனிநபர் வருமானம் மற்றும் பொருளாதார வளர்ச்சினை அதிகரித்துக் கொள்ள பல்வேறு வழிகளில் முயல்கின்றார்கள். குறிப்பாக உலகப் பொருளாதார வளர்ச்சியின் ஒரு எந்திரமாக ஆசியாவில் எழுந்து நிற்பதன் மூலம் வணிக சூழலில், குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சேவைப் பிரிவினுள் அதிக வாய்ப்புக்களை உருவாக்குகின்றன.

இந்தப் பின்னணியில், வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் பிரதான பொறுப்பாக அமைவது அதன் பயிற்சி நடவடிக்கைகளை உலகளாவிய மட்டத்திற்கு கொண்டு வருவதும் தேவைப்பாடு நிலவும் பிரிவுகளுக்கு அறிவு மற்றும் திறமையினைப் பெற்றுக் கொடுக்கும் நவீன வழிமுறைகளையும் தேடிக்கொள்வதாகும். அதற்கிணங்க, இளைஞர் நிறைவேற்று தரம் கொண்ட விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், வீடியோ கலந்துரையாடல்கள் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ திட்டங்களின் மூலம் எமக்கு வெற்றிகரமாக தனிநபர் விருத்தி மற்றும் அமைப்பாண்மை மாற்றங்களை மேற்கொள்வதற்கு முடியுமாக காணப்படுகின்றது. வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்துக்கு பல்வேறுபட்ட கலாச்சாரங்கள் மற்றும் மொழிகளுடன் கூடிய உலகின் வெவ்வேறு பகுதிகளில் காணப்படும் பல்வேறு அமைப்புக்களுடன் தொடர்புகள் காணப்படுவதனால் உற்பத்தித்திறன் வாய்ந்த அறிவு மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு முடியுமாக இருந்தது.

தொலைநோக்கு

நவீன கலைத் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி திறன் விருத்தியில் முன்னிலை வகிக்கும் நிலையமாக விளங்குதல்.

பணிக்கூற்று

உலகளாவிய மட்டத்துடைய அறிவு மையங்களின் ஊடாக உலகமயமாக்கலிற்கான அறிவை பரிமாறிக் கொள்ளும் சேவைகளை வழங்குதல், தொழில்நுட்ப அடிப்படையில் நம்பகரமான வசதிகளை அணுகுவதற்கும், அர்ப்பணிப்புக் குழு வல்லுனர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படும் இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல்.

எமது மதிப்பீடுகள்

- புத்தாக்கம் மற்றும் படைப்புத் திறன்
- வாடிக்கையாளர் தேவைகளுக்குப் பொறுப்புக் கூறல்
- அதி முக்கிய தேவையின் அடிப்படையில் அமைதல்
- பொறுப்புக் கூறல் மற்றும் அர்ப்பணம்
- திறன் விருத்தி தொடர்பான நம்பிக்கை

கூட்டு நிறுவனத் தகவல்கள்

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம் (DLC) 2001 நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியன்று நிறுவனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. அத்தோடு, 2002 மார்ச் மாதம் அது தனது செயற்பாட்டு நடவடிக்கைகளை துவங்கத் தொடங்கியது.

இங்கு குறிப்பிடப்பட்ட மூலதனம் ரூபா. 10 இனைக் கொண்ட சாதாரண பங்குகள் 14,206,509 இனைக் கொண்டுள்ளதோடு, அவற்றில் 100% அதாவது (14,206,509) ஆனவற்றினை இலங்கை அரசுக்கு உரித்துடையது. இது அரசின் வரவு செலவுத் திட்டம் அல்லது நன்கொடைகளின் மீது தங்கிக் காணப்படுவதில்லை என்பதோடு இது தொழில் முயற்சியாளர்களின சொந்த நிதியிலிருந்து பயன்படுத்தப்படுகின்றது.

மேலும் அதுவானது, உள்ள செயற்பாடுகள், பன்முக அலைவரிசை வலையமைப்புகள் மற்றும் இலகுக் கற்கை முறையான பன்முக தளத்துடைய வீடியோ மாநாடுகள், இணையத்தளம் மற்றும் ஏனைய உயர் தரத்துடைய தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி செலவுகளை உற்பத்தித்திறன் வாய்ந்ததாக அமைந்த கற்கை வாய்ப்புக்கள் மற்றும் இயலளவு விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை வழங்கும் உலக வங்கி நிறுவனத்தின் உலகளாவிய அபிவிருத்தி கற்கை வலையமைப்பின் ஒரு அங்கமாகவும் திகழ்கின்றது.

இதனுடன் வேறு சர்வதேச பயிற்சி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளதோடு, இலங்கையினுள் அவற்றின் பாடநெறிகளை தனித்தனியாக நடாத்துவதற்குக் கிடைத்தமை எமக்கு வரப்பிரசாதமாகவும் அமைந்துள்ளது.

தொலைக் கல்வி நிலையம் CIMA மற்றும் ACCA போன்ற பாடநெறிகளின் இயங்கலை பரீட்சைக்கான Pearson VUE பரீட்சை மையமொன்றாக அமையந்துள்ளதோடு, கொழும்பில் நிறுவப்பட்ட அவ்வாறான வசதிகளுடன் கூடிய ஒரே ஒரு நிலையமாகவும் அது திகழ்கின்றது. வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம் 2017 ஆம் ஆண்டின் போது தெற்காசியாவின் மிகப்பெரிய CIMA பரிசோதனை நிலையமாக மாறியுள்ளதுடன், 2000 பரீட்சார்த்திகளளுக்கு மேற்பட்டோர் பரீட்சைகளில் தோற்றுவதற்கான வாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றது.

முக்கிய நடவடிக்கைகள்

உலகளாவிய அறிவினைப் பரிமாறிக் கொள்ளல், ஈ - கற்கை, தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய பயிற்சிகளை வழங்குதல், கல்வித் துறையில் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அரச மற்றும் தனியார் துறைகளின் சேவைப் பெறுநர்களுக்கு வர்த்தக சந்திப்புக்கள் மற்றும் வீடியோ செயலமர்வுகளை நடாத்துவதற்காக உயர் மட்டத்துடன் கூடிய வசதி வாய்ப்புக்களை வழங்குதல், முதற்தரத்துடைய சர்வதேச பரீட்சைகளை நடாத்தும் நிறுவனங்களுக்கு பாதுகாப்பான நிகழ்நிலையுடன் கூடிய பரீட்சைகளை நடாத்துவதற்கான வசதிகளையும் தொலைக் கல்வி நிலையத்தால் வழங்கப்படுகின்றது.

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி, இலங்கை

செயலாளர்கள்

Accounting Systems Secretarial Services (Private) Limited.

வங்கிகள்

இலங்கை வங்கி

பணிப்பாளர் குழு



தலைவர்

செல்வி. வசந்தா பெரேரா
MSc in Project Management (Australia)
PgD in Economic Development (U/Col.)
PgD in Management (PIM, U/SJP)
BSc. (U/Pera)
செயலாளர் - சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு



கலாநிதி எஸ்.எச்.ஏ.எம். அபேரத்ன
PhD IUA, M A in Economics, Dip Development Economics, University of Manchester UK
B A Economics, B Phl Economics (Uni Colombo)



திரு. பைஸல் சாலிஹ்
B A Economics (First Class Honors), MBA (Sri J)
இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதான குழுவின் உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர், காகில்ஸ் வங்கி, பணிப்பாளர் சபை உறுப்பினர், HNB General Insurance Limited இன் உப தலைவர், இலங்கை பணிப்பாளர்களின் நிறுவனம்

.



செல்வி. டானியா அலிகீ பெரேரா
ACMA (UK), MBA (Sri J)
பிரதி பொதுச் செயலாளர் / நிதிக் கட்டுப்பாட்டாளர்
இலங்கை வர்த்தக சம்மேளனம்
Deputy Secretary General/Financial Controller
The Ceylon Chamber of Commerce



செல்வி. கல்யாணி குணதிலக
MBA in HR Management (Sri J), MSc in Economics (Uni. Illinois, USA),
BA Special Sociology (Sri J)
PG Dip. in Economic Development (Uni of Colombo),
Prof. Dip. in HR Systems and Techniques (Sri J)
உதவி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி

சபைக்கான திரைசேறிப் பிரதிநிதி



செல்வி. ஏ. ரம்யா காந்தி
MA in Policy Economics (USA)
MA in Financial Economics (UoC)
PgD in Economic Development (UoC)
Bsc (Sp. Deg.) (UoC)
பணிப்பாளர், கெம்ப்ரோலர் நாயக அலுவலகம்,
நிதியமைச்சு.

செல்வி டி அலிகி பெரேராவுக்குப் பதில் பணிப்பாளர்



கலாநிதி. செல்வநாதன் அனோஜன்
Ph.D., M.Phil., MBA, BBA, B.Eng
உதவிப் பொதுச் செயலாளர்
இலங்கை வர்த்தக சம்மேளனம்

மனித வளங்கள்

முகாமைத்துவக் குழு



தலைமை நிறைவேற்று அதிகரி
கெருஷான் அருளானந்தம்
ACIM (UK), FIM (SL), MBA (Peradeniya)



கற்றல் அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர்
கீர்த்தி விஜேசேகர
MCIM (UK), AABE (UK) MBA Uni Sunderland UK,
MSc HRM & Dev. University of Salford UK



தகவல் தொழில்நுட்ப முகாமையாளர்
அருண புத்திக
MSc SITM (UK), ACS



நிதி மற்றும் நிர்வாக முகாமையாளர்
லக்ஷிகா கலுபோவில
BBA (Sp) 2nd Upper (Hons.),
MBA (Colombo), CBA , MAAT



உதவி விற்பனை முகாமையாளர்
வஜிர அபேநாயக
Advance Diploma in Business Management (NIBM)

எமது குழுவின் ஏனைய உறுப்பினர்கள்



இடமிருந்து

சுலேக திஸ்ஸாநாயக (நிர்வாக உதவியாளர்), நிரோஷா பிரியதர்ஷனி (திட்ட ஒருங்கிணைப்பாளர்), லக்மாலி சமரசேகர (நிறைவேற்றுச் செயலாளர்), தனுஷ்கா துஷாந்தி (செயலக உதவியாளர்), நயனி கல்பகே (கணக்கு உதவியாளர்), ரொமேஷ் பெரேரா (தகவல் தொழில்நுட்ப உதவியாளர்)

பௌதீக வளங்கள்

வீடியோ கலந்துரையாடல் வசதிகள்

தனிப்பட்ட ஒலிவாங்கிகளுடன் 30 பங்கேற்பாளர்கள் உட்பட ஏனைய கண்காணிப்பாளர்கள் 50 பேருக்கு இடமளிப்பு வசதிகள் காணப்படுகின்றது.













கணனிகள் பொருத்தப்பட்ட இரு பல்லூடக அறைகள்


ஒரு அறையில் 30 கணனிகளும் மற்றைய அறையில் 50 கணனிகளும் காணப்படுகின்றன.



Pearson VUE பரிசோதனை மையம்

(90 இருக்கைகள் கொண்ட சோதனை மன்றம்)





தேவைப்படும் போது விரிவுரை அறையாக பயன்படுத்த முடியுமான விசாலமான முகப்பு அறை

சகல கருத்தரங்க அறைகளிலும் ஆடியோ மாநாட்டு வசதிகள் காணப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் மூலம் வீடியோக் கலந்துரையாடல் (Video Conferencing) வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக பின்வரும் சேவைகளை வழங்குதல்.

- ஒருங்கிணைக்கப்பட்ட கற்றல் முறைமையினைப் பயன்படுத்தி நுண் நிதி, இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞானம் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கொள்கைகள் போன்ற தலைப்புக்களின் கீழ் நடாத்தப்படும் சான்றிதழ்ப் பத்திர பாடநெறிகள்.
- அனர்த்த சந்தர்ப்பங்களின் போது அனர்த்த செவிலிப் பணிகள் மற்றும் Partograph போன்ற பாடங்கள் தொடர்பாக உலகாவிய ரீதியில் நிலவும் பல்வேறு வள நிலையங்களின் ஊடாக வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வீடியோ கலந்துரையாடல் வசதிகள் மூலம் தொடர்புபடுத்துதல்.
- உலகில் வேறு பிரதேசங்களில் வாழும் கீர்த்தி மிக்க பேச்சாளர்களினால் (அவ் அந்த பாடங்களில் நிபுணத்துவம் பெற்றவர்கள்) நடாத்தப்படும் கருத்தரங்குகள் மற்றும் காட்சியளிப்புக்கள்.
- கொரியா அபிவிருத்தி அனுபங்கள் போன்ற கருப் பொருட்களின் மூலம் பல்வேறு நாடுகளுடன் தொடர்புபட்டு நடாத்தப்படும் உலகளாவிய அனுபவப் பகிர்வுகளை மேற்கொள்வதற்கான உரையாடல்கள்.
- இணையப் பயன்பாட்டுப் பாதுகாப்பு (Web Application Security) போன்ற நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான அவ் அந்த நபர்களுக்கான அல்லது பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள்.
- வீடியோ கலந்துரையாடல் வசதியினைப் பயன்படுத்தி வியாபார மாநாடுகள் மற்றும் கூட்டங்கள், கல்வி சார் அரட்டைகள் மற்றும் இரு நாடுகளை தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்படும் குடும்ப நிகழ்ச்சிகள் போன்றவற்றினை நடாத்துவதற்கான வசதிகளை வாடகைக்கு வழங்குதல்.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் மூலம் பல்லூடக (Multi Media) வசதியின் மூலம் பின்வரும் சேவைகளை வழங்குதல்.

- அபிவிருத்தி அடைந்து வரும் இளம் நிறைவேற்றுநர்களை உலகளாவிய போக்குகினை நோக்கி வெளிக் கொண்டுவருவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுகளை மேற்கொள்வதற்காக கணனி அடிப்படையிலான பரீட்சைகள்
- ஈ- கற்றலினைப் பயன்படுத்தி அவ் அந்த நபர்கள் அல்லது பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்.
- கணனிப் பயிற்சி (கணனி தொடர்பான அத்தியவசிய அறிவு, (Computer Essentials), சர்வதேச கணனி இயக்குநர் உரிமம், இலங்கை கணனி இயக்குநர் உரிமம், உயர் ஈ- அலுவலக (e – Ofiice) திறன்கள், போன்றவை.
- கருத்திட்ட முகாமைத்துவம், முன்னளிப்புத் திறன்கள், வெளியீட்டுத் திறன்கள், ஈ - கற்றல் உள்ளடக்க அபிவிருத்தித் திறன்கள் போன்றவற்றினை கணனி அடிப்படையிலான பயிற்சிகள்.
- வியாபார ஊக்குவிப்பு நடவடிக்கைகள், மென்பொருள் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் கணனி அடிப்படையிலான பயிற்சிகள் மற்றும் கணனி / இணையத்தினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சைகளை நடாத்துவதற்கு அவசியப்படும் வசதிகளை வாடகைக்கு வழங்குதல்.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தினால் அதன் வசதிகளை மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துக்கு உரித்தான சேவைகளான கேட்பொலி மாநாடு அல்லது அதனைப் போன்ற நேருக்கு நேர் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் (கணனி அடிப்படையிலான மற்றும் ஏனைய பரீட்சைகள்) க்காக வடகைக்கு வழங்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்காக வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் இணையத்தளத்தினைப் பார்வையிடுங்கள்.
www.dlcsrilanka.org

இதற்கு மேலதிகமாக வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின மூலம் பின்வரும் சேவைகளும் வழங்கப்படுகின்றது.

- உள்ளடக்க விருத்தி மற்றும் உள்ளடக்க மொழிபெயர்ப்புகளுடன் கூடிய குறுவட்டு (CD) ஈ - கற்றல் விருத்திக்கான முயற்சிகள் வழங்கப்படுகின்றது.
- செயல்முறை ஆவணங்களை (டிஜிட்டல் மற்றும் அச்சிடப்பட்ட முறைகள்) வழங்குதல்.
- வாடிக்கையாளர் தேவைகளைப் பூரத்தி செய்யும் வகையில் வடிவமைப்புப் பதவிக்கான தேர்வுகள் நடாத்தப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட முக்கிய பயிற்சித் திட்டங்கள் தொடர்பான படங்கள் கலரி

1. மாகாண கல்வித் திணைக்களங்களுக்கான இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

தொலைக் கல்வி நிலையத்தினால் மாகாண கல்வித் திணைக்களங்கள் மூன்றினது (வடமேல், மேல் மற்றும் மத்திய மாகாணங்கள்) அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் 1200 பேரினை விட அதிகமானோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 30 க்கும் மேற்பட்ட அளவுகளில் நடாத்தப்பட்டுள்ளது. இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து நெறிப்படுத்துவது ஏனெனில் தேசியப் பரீட்சைகளின் போது மாணவர்களின் பெறுபேறுகளை மேம்படுத்திக் கொள்வதற்காக மாகாணங்களுக்கு உதவும் வகையிலாகும்.

தொலைக் கல்வி நிலையத்தினால் கல்வித் துறைக்கான புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் இரண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அவை, மாகாணக் கல்வித் திணைக்களங்களில் இணைக்கப்பட்டு சேவையாற்றிக் கொண்டிருக்கும் சேவை ஆலோசகர்களுக்காக பயிற்றுனர் பயிற்சி / அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்களுக்கான (கல்வித் திட்டமிடல்).





2. நிகழ்நிலைப்படுத்தப்பட்ட பரீட்சைகள்

2018 ஆம் ஆண்டில் தொலைக் கல்வி நிலையம் மற்றும் பிரிட்டிஷ் கவுன்ஸிலுடன் இணைந்து அதன் கேம்பிரிஜ் ஆங்கிலப் பரீட்சை, நிறுவனத்தின் வசதிகளைப் பயன்படுத்தி நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட சேவை வழங்குனர்கள் நிகழ்நிலைப்படுத்தப்பட்ட பரீட்சைகளை நடாத்தும் செயற்பாடுகளில் தொலைக் கல்வி நிலையம் முன்னணியில் திகழ்கின்றது. CIMA, ACCA, CASTLE, GATE, JEE, PSI மற்றும் AWS போன்ற நிறுவனங்களினால் இச் சேவையினைப் பெற்றுக் கொடுக்கும் சேவை வழங்குனர்களில் சிலராவர். பாதுகாப்பான பரீட்சைச் சூழலொன்றுடன் கூடிய இப் பரீட்சை நிலையம் அவசியப்படும் சேவை வழங்குனர்களைப் போன்றே அவர்களின் நிறுவனத்தினுள் பரீட்சை வினாப் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த பரீட்சைகள் அவசியப்படும் சேவைப் வழங்குனர்களுக்கிடையில் பிரபலமிக்க நிறுவனமாக விளங்குகின்றது.





3. பொது கருத்தரங்குத் தொடர்கள்

தொலைக் கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட தலைப்புக்களில் கேள்வி கூடுதலாக காணப்பட்டவற்றின் கீழ் பொதுக் கருத்தரங்குகள் நடைபெற்ற தடவைகளின் எண்ணிக்கை உயர்வாகக் காணப்பட்டது. தொலைக் கல்வி நிலையத்தினால் 2018 ஆம் ஆண்டில் பெறுகை முகாமைத்துவம், பணியாட் தொகுதியினரின் ஒழுக்காற்று நடைமுறை ஒழுங்குவிதிகள், தகவல் தொழில்நுட்ப பெறுகை முகாமைத்துவம், நிதி ஒழுங்குவிதிகள், தகவற் தொகுதிக் கணக்காய்வு, பெறுகை கணக்காய்வு, தொகுதி மற்றும் வலையமைப்பு நிர்வாகம் மற்றும் Advanced Excel போன்ற தலைப்புக்கள் தொடர்பாகவும் பொதுவான கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.





4. KDI பாடசாலையுடனான ஒத்துழைப்பு
பிராந்திய அபிவிருத்தி தொடர்பான கலப்பு கற்றல் திட்டம்



கொரியாவின் KDI பாடசாலையின் ஊடாக பிராந்திய அபிவிருத்தி தொடர்பான கலப்பு கற்றல் திட்டத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தொலைக் கல்வி நிலையத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டம் வீடியோ கருத்தரங்குகள் 07 இனைக் கொண்டு அமையப் பெற்றுள்ளதோடு நேருக்கு நேர் முகம் பார்த்து கொரியாவில் நடாத்தப்படும் பயிற்சியினையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது. அவ் வீடியோ கருத்தரங்குகள் 07 இனையும் வெற்றிகரமான முறையில் நிறைவு செய்துள்ள மற்றும் அதில் கலந்து கொண்ட இலங்கையர் இருவருக்கும் கொரியாவில் நடாத்தப்படும் பயிற்சிக்காக முழுமையான அனுசரணை கிடைக்கப்பெற்று கலந்து கொண்டார்கள்.



5. ஆசிய உற்பத்தித்திறன் அமைப்புடன் கூட்டுச் சேர்தல்.

தொலைக் கல்வி நிலையம், ஆசியா உற்பத்தித்திறன் அமைப்பு மற்றும் தேசிய உற்பத்தித்திறன் செயலகத்துடன் இணைந்து மூன்று தலைப்புக்களின் கீழ் வீடியோ கருத்தரங்குகள் மூன்றையும் செயலமர்வுகளாக நடாத்துவதற்குரிய வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. அத் தலைப்புக்களாவன ;

I. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தங்களுக்கான முகாமைத்துவ கண்டுபிடிப்புக்கள் தொடர்பான ஈ - கற்கைப் பாடநெறி
II. விவசாய வணிகத்தினுள் கழிவு முகாமைத்துவம் தொடர்பான ஈ - கற்கைப் பாடநெறி
III. சுகாதாரத் துறைக்கான சேவைப் பெறுநர் திருப்தி முகாமைத்துவம் தொடர்பான ஈ - கற்கைப் பாடநெறி

இந் நிகழ்ச்சித்திட்டங்கள் நான்கு நாட்கள் பூராகவும் நடைபெற்றதுடன் அதில் ஒரு களச் சுற்றுலாவும் அவர்களுக்காக நாடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட விளக்கக்காட்சியும் அதில் உள்ளடக்கப்படுகின்றன. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வீடியோ கருத்தரங்கு முறையின் ஊடாக 10 நாடுகளுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.



கடந்த ஐந்து ஆண்டுகளின் நிதி வளர்ச்சி

திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்தின் பெறுபேறுகளின் சுருக்கம்	2018	2017 (மீளக் கூறுவதாயின்)	2016	2015	2014
	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.
மொத்த விற்பனவு	59.8	62.9	44.3	36.6	29.4
ஏனைய வருமானங்கள்	7.8	6.5	4.1	3.5	4.6
மொத்த வருமானம்	67.6	69.6	48.4	40.1	34.0
மொத்தச் செலவு	52.5	55.5	40.6	33.6	30.7
வரிக்கு முன்னரான வருடத்தின் தேறிய இலாபம்	15.1	14.1	7.8	6.5	3.3
பணியாட் தொகுதியினரின் செலவு	13.0	11.7	10.5	10.3	9.3
பணியாட் தொகுதியினரின் எண்ணிக்கை	12	11	10	9	9

திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான நிதி நிலைமை	2018	2017 (மீளக் கூறுவதாயின்)	2016	2015	2014
	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.	ரூபா.மி.
குறித்துரைக்கப்பட்ட மூலதனம்	142.06	142.06	142.06	142.06	142.06
இந்த ஒப்பந்தத்தின் கீழ் அரசினால் உடனடியாக மீளளிக்கப்பட வேண்டிய நடப்பற்ற கடன் பொறுப்புக்கள்	3.2	6.4	9.6	12.8	16.0
நடப்புக் கடன் பொறுப்புக்கள்	6.9	5.5	1.7	2.6	2.0
மொத்த தேறுமதி / பொறுப்புக்கள்	130.3	115.7	100 7	97.1	93.7
குறுகிய கால முதலீடுகள்	84.0	68.8	53.6	49.7	48.6
பணி மூலதனம்	88.1	73.1	60.9	57.8	55.6
மொத்த சொத்துக்கள்	130.3	115.7	100.7	97.1	93.7

பணிப்பாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்டதொலைக் கல்விநிலையம் -PB 192

2018 திசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான நிறுவனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் வருடாந்த அறிக்கை.

2018 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கையுடன் தனது அறிக்கையினை பணிப்பாளர்களினால் சமர்ப்பிப்பதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

1.பிரதான செயற்பாடுகள் மற்றும் செயல்முறையின் இயல்புகள்

உலகளாவிய தொலைக் கல்வி வலையமைப்பினைப் பயன்படுத்தி விசேடமாக அரசாங்க முகாமைத்துவம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்ற துறைகளில் சர்வதேச மட்ட வல்லுநர்களுடன் இடைவினைச் செயற்பாடுகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் சேவைகளை நோக்கிய அணுகுமுறையினை பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க மற்றும் தனியார்ப் பிரிவு ஊழியர்களுக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள், பணிப் பட்டறைகள், ஆய்வரங்குகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நடாத்துதல் நிறுவனத்தின் பிரதான வியாபாரச் செயற்பாடுகளாகும்.

2. பணிப்பாளர்கள்

2018 திசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நிறுவனத்தின் பணிப்பாளர்கள் பின்வருமாறு அமையப் பெற்றுள்ளார்கள்.

செல்வி. வசந்தா பெரேரா	-	தலைவர்
கலாநிதி. எஸ்.ஏ.எம். அபேரத்ன	-	பணிப்பாளர்
திரு. எம்.ஓ. பைஸல் ஸாலிஹ்	-	பணிப்பாளர்
செல்வி. கே. குணதிலக	-	பணிப்பாளர்
செல்வி. கே.ஏ. ரம்யா காந்தி	-	பணிப்பாளர்
செல்வி. அலிகீ இஸ்மாயில்	-	பணிப்பாளர்

கலாநிதி அனோஜன் செல்வநாதன் - அலீகீ இஸ்மாயீல் அவர்களுக்கு பதில் பணிப்பாளராக 2018.06.26 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டுள்ளார்கள்)

நிறுவனச் சட்டத்தின் 89 மற்றும் 90 ஆம் உறுப்புரைக்கு ஏற்ப மாறி மாறி ஓய்வூதியம் பெற்ற வசந்தா பெரேரா அவர்கள் மற்றும் எம்.ஓ. பைஸல் ஸாலிஹ் அவர்களின் வருகை தந்த வருடாந்த பொதுக் கூட்டத் தொடரின் போது மீளவும் நியமனத்துக்காக விண்ணப்பித்துள்ளார்கள்.

2007 இலக்கம் 07 இனைக் கொண்ட நிறுவனச் சட்டத்தின் 210 மற்றும் 211 ஆம் உறுப்புரைகளுக்கு ஏற்ப ஓய்வூதியம் பெறும் கலாநிதி எஸ்.ஏ.எம். அபேரத்ன அவர்கள் வருகை தந்த வருடாந்த பொதுக் கூட்டத் தொடரில் மீளவும் நியமனத்திற்காக விண்ணப்பித்துள்ளார்கள்.

3. நிதிக் கூற்று

நிறுவனத்தின் நிதிக் கூற்று வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

4. கணக்காய்வு அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

5. கணக்கியல் கொள்கைகள் மற்றும் கணக்கிடலிற்கான பதிவுகள்

கணக்கியல் கொள்கைகள் மற்றும் பதிவுகள் வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளதோடு, ஈடுபடுத்தப்பட்டுள்ள கணக்குக் கொள்கைகளில் முக்கிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

6. பற்றுத் தொடர்பு தொடர்பான பதிவேடு

2007 இலக்கம் 07 இனைக் கொண்ட நிறுவனச் சட்டத்தின் 192 ஆம் உறுப்புரையின் பிரகாரம் நிறுவனத்தின் மூலம் பற்றுத் தொடர்பு தொடர்பான பதிவேடொன்று பேணிச் செல்லப்படும்.

7. பணிப்பாளர்களின் ஒப்பந்தம் தொடர்பாக

செல்வி. வசந்தா பெரேரா , திரு. எம். ஓ. பைஸல் ஸாலிஹ், கலாநிதி. எஸ்.ஏ.எம். அபேரத்ன, செல்வி. கே. குணதிலக, செல்வி. அலிகீ இஸ்மாயில், செல்வி. ஏ.ரம்யா காந்தி ஆகிய பணிப்பாளர்கள், நிதிக் கூற்றுக்கு அமைந்த 22 ஆம் குறிப்பிற்கு ஏற்ப 2018 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான நிறுவன ஒப்பந்தங்கள் தொடர்பான தொடர்புகள் எதுவும் காட்டப்படவில்லை.

8. பணிப்பாளர்களின் உழைப்பூதியம் மற்றும் ஏனைய நலன்கள்

2018 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் நிதி வருடத்திற்காக நிறுவனத்தினால் பணிப்பாளர்களுக்கு உழைப்பூதியம் வழங்கப்படவில்லை.

9. இருப்பு நிலைக் குறிப்புத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்கிடையில் நிதிக் கூற்றுக்களின் சரிக்கட்டல் அல்லது வெளிப்படுத்தல் செய்ய வேண்டிய முக்கிய நிகழ்வுகள் எதுவும் அறிக்கையிடப்படும் திகதிக்குப் பின்னர் இடம்பெறவில்லை.

10. வரி விதிப்பு

வருமானக் கூற்றிற்கு ஏற்ப, 2018 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான வரிப் பொறுப்பு ரூபா. 247,956/-ஆகும்.

11. நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தங்களது அறிவின் பிரகாரம், அரசுக்கு செலுத்த வேண்டியுள்ள சகல கொடுப்பனவுகளையும், கிடைக்கப் பெற வேண்டிய நிதி இயலுமைகளின் அடிப்படையில் செலுத்தப்பட்டுள்ளதாக திருப்தியுற முடிகின்றது.

12. மூலதன வாக்குறுதிகள் மற்றும் தொடர்ச்சியான பொறுப்புக்கள்

இருப்புநிலைக் குறிப்புத் திகதியன்று கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மூலதன வாக்குறுதிகள் மற்றும் தொடர்ச்சியான பொறுப்புக்களுக்கு சந்தர்ப்பமன்று.

13. கணக்காய்வாளர்கள்

நிறுவனத்தின் தற்போதைய கணக்காய்வாளர்களாக உள்ளவர்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்துக்கு வருகை தருவதோடு, வருடாந்த பொதுக் கூட்டத்தில் நிறுவன கணக்காய்வாளராக மீண்டும் நியமிக்கப்படுவார்கள்.

14. வருடாந்த பொதுக் கூட்டம்

நிறுவனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் 2018 மே மாதம் 30 ஆம் திகதியன்று மாலை 4.00 மணிக்கு இலக்கம் 28.்.10இ மலலசேகர மாவத்தை, கொழும்பு 07. என்ற இடத்தில் நடைபெறவுள்ளது.

வரையறுக்கப்பட்ட தொலைதூரக் கற்றல் மையத்தின் பணிப்பாளர்ச் சபையின் கட்டளையின் பிரகாரம் கணக்கியல் முறைமைச் செயலகச் சேவைகளின் (தனியார்) (ACCOUNTING SYSTEMS SECRETARIAL SERVICES (PRIVATE) LIMITED) வரையறுக்கப்பட்ட செயலாளர்களாக பணிப்பாளர்க் குழு காணப்படுகின்றார்கள்.

…….. **……..**
பணிப்பாளர் **பணிப்பாளர்**

…….
செயலாளர்கள்

திகதி: 2019 **மே மாதம் 15 ஆம் திகதி**

கணக்காய்வாளர்களின் அறிக்கை

கணக்காய்வுக் குழு அறிக்கை 2018

தொலைக் கல்வ நிலையததின் கணக்காய்வுக் குழுவின் தலைமைப் பதவியை வகிக்கும் திறைசேரியின் பிரதிநிதி செல்வி. ஏ.கே. ரம்யா காந்தி அவர்கள் என்பதோடு, கலாநிதி எஸ்.எச்.ஏ.எம். அபேரத்ன அவர்கள் மற்றும் செல்வன் கே. குணதிலக அவர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற நிர்வாக சபை உறுப்பினர் பதவியை வகிக்கின்றார்கள். 2018 ஆம் ஆண்டில் நிர்வாகக் குழுக் கூட்டம் 5 தடவைகள் கூட்டப்பட்டதோடு, பொது நிருவாக அமைச்சு மற்றும் நிதியமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட சுற்றறிக்கையுடன் தொலைக் கல்வி நிலையம் இணங்குகின்றதா என்பது குறித்தும் விவாதிப்பதற்கான ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றதோடு, தொலைக் கல்வி நிலையம் தொடர்பாக புதிய மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகளுடன் இணங்கியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவற்றின் மாற்றங்கள் குறித்து இற்றைப்படுத்துவதற்கான அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்ட விசேட கூட்டமொன்றும் உள்ளடங்குகின்றது.

தொலைக் கல்வி நிலையம் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது திரு. பீ.ஆர்.த சில்வா மற்றும் நிறுவனத்துக்காகும். எவ்வாறாயினும், உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சினால் நியமிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதோடு, தொலைக் கல்வி நிலையத்தின் பணிப்பாளர்க் குழுவின் உடன்பாட்டுடன் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தொலைக் கல்வி நிலையத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அதன் நிரல் அமைச்சுக்களான பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தொலைக் கல்வி நிலையத்தின் உள்ளக கணக்காய்வாளரை நியமிப்பதற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவினால் பின்வரும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. சட்டமுறைத் தேவைகளுடனான இணக்கங்களை உள்ளடக்கிய வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்தல்.
2. தேசிய இறைவரித் திணைக்களத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி ஒதுக்கீட்டுப் பிணக்கினை சரி செய்வதற்கு துரிதப்படுத்துதல்.
3. தொலைக் கல்வி நிலையத்தினால் ஆட்சேர்ப்பு நடைமுறையை அரச நிறுவனத் திணைக்களங்களுக்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

உள்ளக கணக்காய்வு செயல்பாட்டை வலுப்படுத்தும் அதேவேளை, தொலைக் கல்வி நிலையம் நல்லாட்சி விரும்பும் விளைவுகளை அறுவடை செய்வதற்காக கணக்காய்வுக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

ரம்யா காந்தி (செல்வி)
தலைவர்
தொலைக் கல்வி நிலையத்தின்
கணக்காய்வுக் குழு.

வெளிவாரி கணக்காய்வாளர் அறிக்கை

தலைவர்
வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது நியதிகளுக்கேற்ப 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்கான வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையத்தின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 தகுதியுடைய அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலைய ("கம்பனி") த்தின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வானது 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் இணைத்து வாசிக்கக்கூடிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154(1) இன் ஏற்பாடுகளை அனுசரித்து எனது வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டதுடன், குறித்த கணக்காய்வு 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் இருந்த நிதிநிலைக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, பங்கு முதலீட்டுக் கூற்று, முடிவடைந்த ஆண்டுக்கான பணப் பாய்ச்சற் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டு கொள்கைகளின் சாராம்சம் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. எனது அறிக்கையானது அரசியலமைப்பின் உறுப்புரை 154(6) ஆம் ஏற்பாடுகளின் கீழ் உரியகாலத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது கருத்துப் படி, எனது அறிக்கையின் தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவுகள் தவிர்த்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியில் கம்பனியின் நிதி நிலை தொடர்பாக உண்மையானதும் நியாயமானதுமான பார்வையை வழங்குவதுடன், அதன் நிதி செயலாற்றுகையும் குறித்த திகதியில் முடிவடைந்த திகதிக்கான அதன் நிதிப் பாய்ச்சல்களும் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கேற்ப அமைந்துள்ளன.

1.2 தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள 2018 டிசம்பரில் பெறக் கூடிய ரூபா. 3,477,438 பெறுமதியான தொகை நிறுத்தி வைக்கப்பட்ட வரியானது சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு தரநியமங்களின் பகுதி 11.21 மூலம் வேண்டப்படுகின்றமுடக்கத்துக்கானஏற்பாடுகளேதும் மேற்கொள்ளப்படாது பெறக்கூடியதென காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் பிரிவு 29க்கேற்ப ஒத்திவைக்கப்பட்ட வரி வீதங்கள் வரி அறவிடப்படக் கூடிய இலாபத்தின் பல்வேறு மட்டங்களுக்கு உபயோகிக்கப்படும் போது ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புக்களை /(சொத்தக்களை) சராசரி வருமான வரி வீதங்களை பயன்படுத்தி மதிப்பிட வேண்டுமென்பதுடன், அது ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்பு செலுத்தப்படவுள்ள காலங்களின் வரி அறவிடத்தக்க இலாப /(வரி இழப்பு)த்துடன் பொருந்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், அதற்கு முரணாக 14 சதவீதம் வரி

அறவிடப்படக்கூடிய வியாபார வருமானம் மற்றும் வரி இழப்புக்கள் ஆகிய இரண்டிலிருந்தும் ஏற்படும் ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புக்களை ∴ (சொத்துக்களை) மதிப்பிடுவதற்கு வரி வருமானத்துக்கு பொருந்தும் 28 சதவீத வரி வீதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பெறுபேறாக, நடப்பு ஆண்டு வருமான வரி செலவும் ஒத்திவைக்கப்பட்ட வரி சொத்தும் ரூ. 3,374,000 இனால் மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கிணைவாக இக் கணக்காய்வு நடத்தப்பட்டுள்ளது. அத்தகைய தரநியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளன. எனது தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுகொண்ட கணக்காய்வு சாட்சியம் போதுமான தென்றும் பொருத்தமான தென்றும் நான் நம்புகிறேன்.

1.3 முகாமையினதும் நிதிக் கூற்றுக்களுக்கான நிர்வாகத்துக்கு பொறுப்பானவர்களதும் பொறுப்புக்கள்

நிதிக் கூற்றுக்கள் சிறு மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக உண்மையாகவும், நியாயமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளனவென்று உறுதிப்படுத்துவதும், இத்தகைய உள்ளக கட்டுப்பாட்டுக்காக முகாமை தீர்மானிக்கின்றவாறு மோசடி அல்லது தவறின் காரணமாக பிறழ்கூற்றேதும் இல்லாது நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பினை சாத்தியமாக்குவதும் முகாமையின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கையில் கம்பனி இயங்கும் நிறுவனமாக (going concern) தொடர்ந்திருப்பதற்கான அதன் இயலுமையை மதிப்பிடுவதற்கும் அவ்வாறு இயங்கும் நிறுவனத்துடன் தொடர்புடைய விடயங்களை தேவைப்படின் வெளிப்படுத்துவதற்கும், மேலும் முகாமை ஒன்றில் கம்பனியை கலைப்பதற்கோ அல்லது அதன் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கோ உத்தேசிக்கா விட்டாலும், அல்லது யதார்த்தமான மாற்று நடவடிக்கை இல்லாதிருந்தாலும் அவ்வாறு செய்வதற்காக கணக்கீட்டுக்கு இயங்கும் நிறுவன அடிப்படையை பயன்படுத்துவதற்கும் முகாமை பொறுப்பாகும்.

ஆளுகைக்கு பொறுப்பானவர்கள் நிறுவனத்தின் நிதி அறிக்கை செயன்முறையை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாக செயற்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவுக்கேற்ப கம்பனியின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவைப்படுகின்ற அதன் வருமானம், செலவினம் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை கம்பனி பேணிவர வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

முழு நிதிக் கூற்றிலும் மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தரநியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக

உத்தரவாதப் படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுகள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும். பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தவதாயின் அவை முக்கியமானவை.

இலங்கை கணக்காய்விடல் நியம தரங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் Law வினை பேணுகின்றேன். மேலும்,

- நான், மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களின் முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் கணக்காய்வு செயன்முறைகளை திட்டமிட்டும் பயன்படுத்தியும், எனது கருத்துரைக்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்கு போதியளவிலான பொருத்தமான கணக்காய்வு சான்றினை பெற்றுக் கொள்கிறேன். மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் உயர்வானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதிக்கும், உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

- கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பாக கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளக கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப் பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- கம்பனி இயங்கும் நிறுவனமாக தொடர்வதற்கு கம்பனியின் இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் இயங்கும் நிறுவனம் அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்துக்கேற்பவும் பெற்றுக் கொண்ட கணக்காய்வு சான்றின் படியும் முடிவெடுக்கிறேன். முக்கியமான ஏதொவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக் கொண்ட கணக்காய்வு சான்றின் அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினையும், மேலும் குறித்த நிதிக் கூற்றுக்கள் நியாயமான

முன்வைப்பாக இருக்கும் விதத்தில் அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றனவா எனவும் மதிப்பீடு செய்கிறேன்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டிலிருந்த குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க கணக்காய்வு தேடல்கள் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

2. சட்ட மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பானஅறிக்கை

கீழுள்ள தேவைப்பாடுகளுக்காக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டமும் குறிப்பான சில ஏற்பாடுகளை உள்ளடக்கி இருக்கின்றன.

- தகுதியுடைய அபிப்பிராயத்துக்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்வுக்கும் அவ்வாறு எனது பரிசோதனையின் போது அவசியமானவை என தோன்றிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (1) (ஈ) ஆம் பிரிவு மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவின் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அவற்றுக்கேற்ப சிறந்த கணக்கீட்டு பதிவுகள் பேணப்பட்டன.

- 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவுக்கு இசைவாகவே நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் அமைந்திருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப முந்திய ஆண்டின் தொடர்ச்சியாகவே நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப முந்திய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நிறைவேற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் முக்கியமென கருதப்பட்ட விடயங்கள் வரையறைக்கு உட்பட்டிருந்தமையினால்

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (ஈ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப கம்பனியின் ஆளும் குழுவின் எவரேனும் உறுப்பினர் அத்தகைய கம்பனியினால் வியாபாரத்தின் சாதாரண ஏதுக்கு அப்பால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளாராவென கூறுவதற்கும்

- **கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தவிர்த்து**, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (ஊ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான சட்டத்துடன் அல்லது கம்பனியின் ஆளும் குழுவினால் வழங்கப்பட்ட பொது மற்றும் விஷேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்

சட்டத்துக்கான குறிப்பீடு	விபரம்
(அ) அரச தொழில் முற்சியாளர்கள் சுற்றுநிருபம் இல. PED 12/ 02/06/2003	
(i) பகுதி 9.2 (அ)	நிறுவன ஒழுங்கமைப்பும் ஆளணியும் பொது திறைசேரியின் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், கம்பனி இத்தேவைப்பாட்டினை பூர்த்திசெய்யவில்லை.
(ii) பகுதி 9.3.1	ஒவ்வொரு அரச தொழில் முயற்சியிலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமிருக்க வேண்டும். எனினும் கம்பனியில் அவ்வாறான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட திட்டமில்லை.
(ஆ) 2009/04/16 ஆம் திகதியுடைய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பகுதி 02	அவர்களின் வருகை மற்றும் புறப்படுகையை உறுதிப்படுத்துவதற்கு விரலடையாள ஸ்கேனர்கள் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும், கம்பனியின் உத்தியோகத்தர்கள் தமது வரவினையும் புறப்படுகையையும் பதிவுதற்கு விரலடையாள ஸ்கேனர்களை பயன்படுத்துவதில்லை

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (எ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப கம்பனி அதன் தத்துவங்களையும், தொழிற்பாடுகளையும் மற்றும் கடமைகளையும் நிறைவேற்றவில்லை என கூறுவதற்கும்,

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாட்டுக்கேற்ப கம்பனி வளங்கள், காலவரையறைகளினுள்ளும், ஏற்புடையற்பாலானவான. சட்டங்களுக்கு இணங்கியொழுகவும், சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என கூறுவதற்கும.

ஏதெனுமொரு விடயம் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

டப்ளியூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்.

நிதி கணக்காய்வு அறிக்கை 2018

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம்
28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.

2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான விஸ்தீரண வருமானக் கூற்று

	குறிப்பு	**2018**	2017
		ரூபா.	**ரூபா.**
வருமானம்	**04**	**59,779,244**	62,953,972
விற்பனைச் செலவு	**05**	**(21,572,552)**	(29,154,623)
மொத்த இலாபம்		**38,206,692**	33,799,349
ஏனைய வருமானம்	**06**	**130,459**	76,738
விநியோகச் செலவுகள்	**07**	**(2,005,942)**	(1,466,631)
நிர்வாகச் செலவுகள்	**08**	**(29,017,313)**	(24,832,784)
தேறிய நிதி வருமானம்	**09**	**7,803,967**	6,5 42,361
வருமான வரிக்கு முன்னரான இலாபம்/ நட்டம்		**15,117,863**	14,119,033
வருமான வரிச் சேமிப்புக்கள்	**10**	**247,956**	(1,101,429)
வருடத்திற்கான இலாபம் (நட்டம்)		**15,365,819**	13,017,604
பங்கிற்கு உரிய சம்பாத்தியம்	**11**	**1.08**	0.92

நிதி அறிக்கைக்கு உரித்தான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

அடைப்புக் குறிக்குள் காணப்படும் புள்ளிவிபரங்கள் குறைவினைக் காட்டுகின்றன.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம்
28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.

நிதியியல் நிலைமை தொடர்பான அறிக்கை

	குறிப்பு	31.12.2018	31.12.2017
		ரூபா.	ரூபா.
சொத்துக்கள்			(மீள கூறப்பட்டுள்ளது)
நடப்பற்ற சொத்துக்கள்			
சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	**12**	**1,373,551**	1,649,262
குத்தகை வாடகை	**13**	**23,170,821**	24,825,880
ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து	**14**	**7,630,698**	7,382,742
மொத்த நடப்பற்ற சொத்துக்களின் அளவு		**32,175,070**	33,857,884
நடப்புச் சொத்துக்கள்			
வர்த்தகம் மற்றும் ஏனைய வரவுகள்	**15**	**9,105,818**	8,344,585
ஏனைய நிதிச் சொத்துக்கள்	**16**	**84,011,006**	68,846,070
அறவிடப் பட வேண்டிய நடப்பு வரி	**17**	**4,675,331**	4,172,925
பணம் மற்றும் பணத்திற்கு சமனானவைகள்	**18**	**354,721**	448,790
மொத்த நடப்புச் சொத்துக்களின் அளவு		**98,146,876**	81,812,370
மொத்த சொத்துக்களின் அளவு		**130,321,946**	115,670,254
சம பங்குகள் மற்றும் பொறுப்புகள்			
சம பங்குகள்			
கூறப்பட்ட மூலதனம்	**19**	**142,065,090**	142,065,090
திரட்டப்பட்ட இலாபம் / (நட்டம்)		**(24,494,297)**	(39,641,902)
மொத்த சம பங்குகள்		**117,570,793**	102,423,188
நடப்பற்ற பொறுப்புக்கள்			
வட்டிக்கு கடன் வாங்குதல்	**20**	**-**	3,206,160
ஊழியர் நலன்கள்	**21**	**2,657,995**	1,282,875
மொத்த நடப்பற்ற பொறுப்புகள்		**2,657,995**	4,489,035
நடப்பு பொறுப்புகள்			
வட்டிக்கு கடன் வாங்குதல்	**20**	**3,206,160**	3,206,160
வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	**22**	**3,764,888**	4,404,642
கிடைக்கப் பெற்ற முற்பணம்	**23**	**3,122,110**	234,260
செலுத்தப்பட வேண்டிய வருமான வரி		**-**	912,969
மொத்த நடப்பு பொறுப்புகளின் அளவு		**10,093,158**	8,758,031
மொத்த சம பங்குகள் மற்றும் பொறுப்புகள்		**130,321,946**	115,670,254

இந்த நிதி அறிக்கை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கத்தினைக் கொண்ட நிறுவனச் சட்டத்திற்கு இணங்கியதாக முன்வைக்கப்பட்டுள்ளது.

....

நிதி முகாமையாளர் **பிரதம நிறைவேற்று அலுவலர்**

இந்த நிதி அறிக்கையை தயாரித்தல் மற்றும் முன்வைப்பது தொடர்பாக பணிப்பாளர் குழுவுக்கு பொறுப்புக் கூறல் வேண்டும்.

தொலைதூரக் கற்றல் மையத்தின் பணிப்பாளர் குழுவுக்குப் பதிலாக அங்கீகரித்து ஒப்பமிடப்பட்டுள்ளது.

....

தலைவர் **பணிப்பாளர்** **பணிப்பாளர்**

நிதி அறிக்கைக்கு உரித்தான குறிப்புக்கள் இந்த நிதி அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியிலிருந்து பெறப்பட்டுள்ளது.

அடைப்புக் குறிக்குள் காணப்படும் புள்ளிவிபரங்கள் குறைவினைக் காட்டுகின்றன.

வரையறுக்கப்பட்ட தொலைக் கல்வி நிலையம்
28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07.

2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் வருடத்திற்கான பங்கு மாற்ற அறிக்கை

	குறிப்பிடப்படட மூலதனம் ரூபா.	திரட்டப்பட்ட இலாப / (இழப்பு) ரூபா. (மீள கூறப்பட்டுள்ளது)	மொத்த பங்குகள் (மீள கூறப்பட்டுள்ளது)
2017 சனவரி 1 ஆந் திகதிக்கு நிலுவை	142,065,090	(53,942,220)	88,122,870
மறுவிளக்க அறிக்கை குத்தகை வாடகை (குறிப்பு அ)	-	1,282,714	1,282,714
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்	-	13,017,604	13,017,604
2017 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவை	142,065,090	(39,641,902)	102,423,188
2018 சனவரி 1 ஆந் திகதிக்கு நிலுவை	**142,065,090**	**(39,641,902)**	**102,423,188**
முந்தைய ஆண்டின் செம்மையாக்கம் (குறிப்பு ஆ)	**-**	**(218,214)**	**(218,214)**
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம	**-**	**15,365,819**	**15,365,819**
2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிலுவை	**142,065,090**	**(24,494,297)**	**117,570,793**

